**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்**

| 2023-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 11-ம் நாள் திங்கள்கிழமை வாதி தரப்பு 2ம் சாட்சியின் வாக்குமூலம் 1869ம் ஆண்டு சட்ட எண் 44வது பிரிவு 6(1)ன் பிரிவின்படி உதவியாளர் திரு. சிவா என்பவரால் உறுதி பிரமானம் செய்யப்படுகிறது. | | | |
|---|---|---|---|
| பெயர்: | பாண்டியராஜன் | தொழில் : | |
| த.பெ: | ஆதிமூலம் | சமயம் : | |
| கிராமம்: | | சாதி : | |
| வட்டம்: | | வயது: | |

**11.9.2023 OS No. 38/2022 வா.சா.2** பாண்டியராஜன் **ஆஜர்**
**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை:**

1. வாதிகள் எனக்கு என்ன உறவு முறை என்றால் பங்காளி முறையில் தம்பிகள் ஆவார்கள். வாதிகள் எனக்கு உறவினர்கள் என்பதால் நான் அவர்களுக்காக நீதிமன்றத்தில் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதிகளும், பிரதிவாதியும் எனக்கு உறவினர்கள்தான். தாவா சொத்தான பாதைக்கு எந்த பக்கம் பிரதிவாதி இடம் உள்ளது என்றால் கிழக்கு பக்கம் உள்ளது. தாவா சொத்தான பாதைக்கு எந்த பக்கம் வாதிகள் இடம் உள்ளது என்றால் மேற்கு பக்கம் உள்ளது.

2. தாவா சொத்து வருவாய் ஆவணங்களில் என்னவாக வகைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்து உள்ள பகுதி மொத்தமும் நத்தம் புறம்போக்கு என்றால் தற்போது நத்தம் புறம்போக்குதான். நத்தம் புறம்போக்கு என்பது அரசுக்கு பாத்தியப்பட்ட நிலம் என்றால் அது திருப்பதி வகையறா கிரையம் வாங்கிய நிலமாகும். ஆனால், வருவாய் ஆவணங்களில் தாவா சொத்து பாதை என வகைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது.

3. வாதி நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.2 ஆவணத்தில் தாவா சொத்து பாதை என வகைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்றால் எனக்கு எழுத படிக்கதெரியாது. எனது நிருபண வாக்குமூலத்தில் நான் சொல்லியுள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் இரண்டு மாதங்கள் ஆகிவிட்டதால் மறந்துவிட்டது. எனக்கு கையெழுத்து இடும் பழக்கம் உள்ளதா, கைரேகை வைக்கும் பழக்கும் உள்ளதா என்றால் எனக்கு கையெழுத்து செய்வேன்.

4. வருவாய் ஆவணங்களில் அனைத்திலும் தாவா சொத்து நத்தம் மற்றும் பாதை என வகைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும், வாதிகள் எனது உறவினர்கள் என்பதால் வாதிகளுக்கு ஆதரவாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தை பாதையாக எவ்வளவு நாட்கள் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் 60 வருடம் இருக்கும். பிரதிவாதி மேற்படி பாதை வழியாகதான் அவரது சொத்திற்கு போகமுடியும் என்றால் சரிதான். பிரதிவாதிக்கு வேறு எந்த பக்கமும் பாதை கிடையாது என்றால் வேறு

பக்கமும் பாதை உள்ளது. அவர் கிரைய வாங்கிய பக்கம் பாதை உள்ளது.

**மறு விசாரணை இல்லை.**

Taken down by me in open court
read over/ interpreted to the witness
in Tamil and acknowledged by him,
her to be correct.

District Munsif Cum
Judicial Magistrate,
Thiruppuvanam.